மீஞ்சூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை. திருமதி.த.மகேஸ்வரி.,

ந.க.எண். : 235/2025/அ2, **நாள். 12-12-2025.**

பொருள்: மனை பிரிவு வரைபட அனுமதி – திருவள்ளூர் மாவட்டம் – மீஞ்சூர் சிறப்புநிலை பேரூராட்சி – மீஞ்சூர் வருவாய் கிராமம் சர்வே எண். 145/ 2, 7, 159/3A, 160/1, 2, 3, 7, மற்றும் 160/8-ல் மனைப்பிரிவு வரைபட அனுமதிக்கு அபிவிருத்தி கட்டணம் செலுத்தியது – மனைபிரிவு அனுமதி வழங்குவது – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்.181 வீட்டு வசதி மற்றும் நகர மேம்பாட்டு (UD4(1) துறை நாள்.09.12.2020.
2. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் கடிதத்துடன் வரப்பெற்ற தானப்பத்திர ஆவண எண்.3670 நாள்.26.04.2025 மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி எண்.CMDA/PP-Layout-0295/2024 நாள். 21.05.2025
3. இவ்வலுவலக அலுவலக சாரா குறிப்பு கடித எண்.235/2025/அ2 நாள்.02.07.2025
4. இவ்வலுவலக கடித ந.க.எண்.235/2025/அ2 நாள்.29.09.2025 தமிழ்நாடு மின்சார வாரியம் உதவி பொறியாளருக்கு முகவரி இட்டது.
5. M/S கவீரா ரிலேட்டர்ஸ் அண்ட் அதர்ஸ் 14/66, ஜந்த்ரவர் தெரு, காலடிபேட்டை, திருவொற்றியூர் சென்னை மனு நாள். 11.12.2025
6. மூன்றாம் தரப்பினரின் ஆய்வறிக்கை வரப்பெற்ற நாள்.07.11.2025
7. தொடர்புடைய ஆவணங்கள்.

****

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட (சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும கடிதத்தின்படி) மீஞ்சூர் வருவாய் கிராமம் சர்வே எண். 145/ 2, 7, 159/3A, 160/1, 2, 3, 7, மற்றும் 160/8-ல் விஸ்தீரணம் 22800 சதுரமீட்டரில் 123 முறைப்படி (Regular) குடியிருப்பு 28 EWS மனைகள் 1 வணிக பயன்பாட்டு மனைகளாக உட்பிரிவு செய்து அங்கிகாரம் கோரும் முன்மொழிவுகள் மனுதாரார் நேரடியாக சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு சமர்பிக்கப்பட்டு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தினரால் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்குதல் தொடர்பாக உரிய அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு, பொதுச்சாலைகளுக்கு என 6798 ச.மீ இடமும், பொது பயன்பாட்டிற்காக 165 ச.மீ, பூங்கா பராமரிப்பிற்கு 1603 ச.மீ இடமும் பேரூராட்சிக்கு தானமாக அளிக்கப்பட்டு பார்வை 1-ல் காணும் விவரப்படிக்கு பேரூராட்சிக்கு வரப்பெற்றுள்ளது.

மேற்படி மனைபிரிவு வரைபட அனுமதி வழங்கும் இடத்தினை பார்வையிடப்பட்டது மற்றும் வரப்பெற்ற ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. பேரூராட்சி மன்றத்தில் மனைபிரிவு வரைபடம் விதிமுறைகளுக்குட்பட்டு அங்கீகாரம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய அபிவிருத்திக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், மனைப்பிரிவில் சாலை வசதி, குடிநீர் பைப்லைன், மின்விளக்கு மற்றும் வடிகால் ஆகியவை திருப்திகரமாக உள்ளது என பார்வை 6-ல் காணும் மூன்றாம் தரப்பினரின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

எனவே, மீஞ்சூர் வருவாய் கிராமம் சர்வே எண். 145/ 2, 7, 159/3A, 160/1, 2, 3, 7, மற்றும் 160/8-ல் விஸ்தீரணம் 22800 சதுரமீட்டரில் 123 முறைப்படி (Regular) குடியிருப்பு 28 EWS மனைகள் 1 வணிக பயன்பாட்டு மனைபிரிவு அனுமதியளித்து கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப் பிரிவு வரைபட அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1) சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினரால் ஒப்புதல் அளித்த மனையினை துணை மனைப்பிரிவு (Sub Division) செய்து விற்பனை செய்யக்கூடாது.
2) குடியிருப்புக்காக ஒதுக்கப்பட்ட மனையை வணிக உபயோகதிற்கு விற்பனை செய்யக் கூடாது.
3) மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டதற்கு பேரூராட்சிக்கு செலுத்தப்பட்ட கட்டணங்கள் குறைவாக வசூலிக்கப்பட்டுள்ளதாக தணிக்கையில் தெரிவிக்கப்பட்டால் அதனை தாங்கள் செலுத்துவதற்கு பொறுப்பாவீர்கள்.

செயல் அலுவலர்
மீஞ்சூர் சிறப்புநிலை பேரூராட்சி
திருவள்ளூர் மாவட்டம்.

இணைப்பு. வரைபட நகல்

பெறுநர் :–

M/S Kaveera Realtors and Others
No.14/66 Jandravar street,
காலடிப்பேட்டை, திருவொற்றியூர்,
சென்னை – 19.

நகல்:-

உறுப்பினர் செயலர்,
சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்,
எண்.1, காந்தி இர்வின் சாலை,
தாளமுத்து நடராஜன் மாளிகை எழும்பூர்,
சென்னை–600008,
அவர்களின் தகவலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.